**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 86/2015**

**அ.சா : 10**

| | | |
|---|---|---|
| பெயர் | : | S. செந்தில்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சுப்ரமணியன் |
| ஊர் | : | கிருஷ்ணகிரி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | அரசு மருத்துவர் |
| மதம் | : | |
| வயது | : | 43 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 01.08.2023**

**2, 3 எதிரிகள் ஆஜர். 1,5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிருஷ்ணகிரி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.12.2015 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்த போது மாலை 05.00 மணிக்கு 65 வயதுள்ள கிருஷ்ணமூர்த்தி, த.பெ. திம்மராய கவுண்டர், பாரதிபுரம் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து வந்தார்கள். அவர் தன்னை ஐந்து தெரிந்த நபர்கள், மதியம் 12.00 மணிக்கு தனது வீட்டருகே வைத்து தனது கை மற்றும் கம்பால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்த போது 2x1 செ.மீ அளவுள்ள நெற்றியில் இரத்த காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். **கிருஷ்ணமூர்த்தியின் விபத்து பதிவேடு அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் ஐந்து மணி நேரம் காலதாமதமாக சிகிச்சை வந்தார் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து அருகிலேயே மத்தூர் அரசு

மருத்துவமனை உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த காயங்களுக்கு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருக்கலாம் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் ரெபர் செய்து சிகிச்சைக்கு வரவில்லை. போலீசார் விசாரணையில் காயம்பட்ட நபரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து சிகிச்சை அளித்தேன் என்று கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தன்னிச்சையாக கீழே விழுவதால் காயம்பட்ட நபருக்கு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயத்திற்கு உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**